# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி: 23411 நிறுவியது 1947

வள்ளுவர் ஆண்டு 2007 | ஆவணி 13 | றம்ழான் 3 | (29-8-76) ஞாயிறு | புத்தகம் 30, | இதழ் 37


**சிறையில்**

**''உண்ணுவிரதமிருக்கும் காசிஆனந்தனின் உயிர் பிரிந்தால் நாடு பிரியும்''**

**பேரவையில் ஜெயக்கொடி எச்சரிக்கை**

(விபரம் 4-ம் பக்கம்)

● ஆயிரத்து ஐ நூறு இராணுவ வீரர்கள்!

● 500 பொலிசார் 8 'ஆமெட்' கார்கள்!

# யாழ்ப்பாணத்தில் இராணுவம் பொலீஸ் குவிப்பு!

தமிழ் ஈழத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா அரசாங்கத்தின் ஆயுதப்படை திடீரென குவிக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டாயிரம் ஆயுதப்படையினர் தென்னிலங்கையிலிருந்து வடக்கே அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. 1500 இராணுவவீரர்களும் 500 பொலிசாரும், 8 'ஆமெட்' கார்களும் தமிழ் ஈழத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

கூட்டுச்சேரா மாநாட்டின் போது உலக விடுதலை இயக்கங்களுக்கு உதவிபுரியும் குழுவின் தலைவியாக தெரிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா, மாநாடு முடிந்ததும் தனது முதல் நடவடிக்கையாக ஈழத்தமிழர் விடுதலைக்கிளர்ச்சியை நசுக்குவதற்காக யாழ்ப்பாணத்துக்கு தனது இராணுவத்தையும் பொலிசையும் அனுப்பி வைத்திருப்பதாகவும், அம்மையாரின் உருத்திராட்சப்பூனை வேடத்தை அறிந்து கொள்ள உலக நாடுகளுக்கு இது நல்ல சந்தர்ப்பமென்றும் அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

யாழ்ப்பாணத்துக்கு இவ்வாறு பெருந்தொகையான ஆயுதப்படைகள் அனுப்பப்பட்டிருப்பதுபற்றி தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஒருவரிடம் கருத்துக் கேட்டபோது அவர் கூறியதாவது:-

"யாழ்ப்பாணத்துக்கு திடீரென பெருந்தொகை இராணுவத்தை அனுப்பிவைத்த அம்மையாரின் செயல் அப்பட்டமான ஆக்கிரமிப்பேயாகும். தமிழீழ விடுதலை கோரும் உணர்ச்சிமிக்க தமிழ் இளைஞர்களை வலிந்து வம்புக்கிழுத்து, ஒருமோதலை உண்டாக்கி, அதை ஒரு காரணமாக வைத்து அநியாயமாக தமிழர் உயிர்களை பலியெடுக்க அம்மையார்

—5-ம் பக்கம் பார்க்க

## தனிநபர் சட்டமறுப்புக்கு விடுதலைக் கூட்டணி திட்டம்!

தனிநபர் சட்டமறுப்பு இயக்கத்தை அடுத்து ஆரம்பிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி திட்டமிட்டுள்ளது. புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்தும், தமிழ் ஈழப் பிரிவினையை வலியுறுத்தியும் சிங்களத் தலைவர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் தனிப்பட்டமுறையில் கடிதங்கள் அனுப்புவதே இச் சட்டமறுப்பு நடவடிக்கையாக இருக்கும்!

அரசியல் சட்டத்துக்கு விரோதமாக பேசுவதும்எழுவதும் அவசரகாலச் சட்டத்தின்கீழ் குற்றமானதெனப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது; அதேபோல நாட்டுப் பிரிவினை பற்றி எழுதுவதும் பேசுவதும் குற்றம் என அவசரகாலப் பிரமாணங்கள் கூறுகின்றன. இந்த இரு சட்டங்களையும் ஒரே நேரத்தில் மீறுகின்ற முறையில் இச்சட்டமறுப்புக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டிருக்கும்.

இக்கடிதங்களை அனுப்பும் சட்டமறுப்புத் தொண்டர் தம்முடைய முழுமையான பெயர் முகவரியை குறிப்பிட்டே சிங்களத் தலைவர்களுக்கு அனுப்பிவைப்பார். அமைச்சர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் சிங்கள அரசியல் தலைவர்கள், சிங்க

—4-ம் பக்கம் பார்க்க

## தேசியபேரவைக்கு பலத்த பொலிஸ் காவல்! கூட்டணி பா. உ.க்கள் 12 மணி நேரம் உண்ணுவிரதம்!

### ஒத்திவைப்புப் பிரேரணைக்கு சபாநாயகர் அனுமதி மறுப்பு!

### கொழும்பு நகரெங்கும் பரபரப்பு!

ஆயுதம் தாங்கிய பொலிசார் தேசிய அரசுப்பேரவையைச் சுற்றிக் காவல் காத்து நிற்க, தேசிய அரசுப் பேரவைக்குள் தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.க்கள் பத்துப்பேர் 12 மணி நேரம் உண்ணுவிரதம் அனுட்டித்தனர். இந்த உண்ணுவிரதத்தின்போது பொலிசார் பலத்த பந்தோபஸ்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். கொழும்பு நகரமெங்கும் பலத்த பரபரப்பு காணப்பட்டது.

சிறையில் சாகும்வரை உண்ணுவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் முன்வைத்துள்ள கோரிக்கையை ஆதரித்தும் தமிழ் ஈழப் பிரிவினையை வலியுறுத்தியும் தமிழர் விடுதலைக்கூட்டணி பா. உ.க்கள் இந்த அடையாள உண்ணுவிரதத்தை மேற்கொண்டிருந்தனர்.


சபையை ஒத்திவைத்து சிறையில் உண்ணுவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினையை விவாதத்துக்கு எடுக்கவேண்டுமென்று கூட்டணி பா. உ.க்கள் கொண்டுவரவிருந்த தீர்மானத்துக்கு சபாநாயகர் அங்கீகாரம் அளிக்க மறுத்ததால் சபையில் கொண்டுவரப்படவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.கள் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி தமது உண்ணுவிரதத்தை தேசிய அரசுப் பேரவை படிக்கட்டுகளில் அமர்ந்து 26-8-76வியாழக்கிழமை காலை சரியாக 7 மணிக்கு ஆரம்பித்தனர். கூட்டணி பா. உ.க்கள் உண்ணுவிரதம் இருக்கும் செய்தி பரவியதுடன உடனடியாக அங்கு ஜீப்புகளிலும் டிறக்குகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் வந்து குவிந்து பேரவையைச் சுற்றிக் காவலிடத்தொடங்கியதுடன் அனுமதியின்றி வெளியார் எவரையும் உள்ளே விட மறுத்தனர்.

தலைவர்களைச் சிங்களக் குண்டர்கள் தாக்கக்கூடும் என்று அஞ்சியே பலத்த

—4-ம் பக்கம் பார்க்க

## இவர்தான் பாலசுப்பிரமணியம்!



கடந்த 13.8.76ல் விசாரணைக்காக சி. ஐ. டி. பொலிசாரால் அழைத்துச்செல்லப்பட்டு 10 நாட்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் 23.8.76 பிற்பகல் விடுதலை செய்யப்பட்ட சுதந்திரன் அச்சக நிர்வாகி திரு. மூத்ததம்பி பாலசுப்பிரமணியம் இவர்தான்! இவர் 4-வது மாடியிலும், துறைமுகப் பொலிசிலும் தடுத்துவைக்கப்பட்டார். சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் உண்ணுவிரதத்தை ஆதரித்து, அவர்களை விடுதலை செய்யும்படி அரசாங்கத்தைக்கோரும் தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளையின் இரு துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டுகொடுத்ததற்காகவும், இலண்டனில் வெளியிடப்பட்டு கூட்டுச்சேரா மாநாட்டு பிரதிநிதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வாவின் மகஜரை சுதந்திரன் அச்சகத்தில் மறுபிரசுரம் செய்துகொடுக்க முயன்றதற்காகவுமே இவர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

இவருக்குப்பின் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளைத் தலைவர் ஆ. ரகுபதிபால சிறீதரனும், பொருளாளர் க. உமாமகேஸ்வரனும் 23.8 76ல் விடுதலைசெய்யப்பட்டுவிட்டனர்.

## நன்றி நவிலல்

நான் 14-8-1976 முதல் 23-8-1976 வரை அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் இருந்தபோது தமது பொருளாதார நிலை, கடமை உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு பல வழிகளில் எனக்கு உதவி புரிந்த (பெயர் குறிப்பிட இயலாத) அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

மூ. பாலசுப்பிரமணியம்
சுதந்திரன்
கொழும்பு

26-8-1976

**தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● ஒரு கற்பனைச் சித்திரம்

# ஐந்தாவது கூட்டுச்சேரா மாநாட்டில் பிரதமர் சிறிமாவோ நிகழ்த்தாத தலைமையுரை!

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கி, சிறிமாவோ பண்டாரநாயக்கா மாவத்தை வழியாகக் கொழும்பை அடைந்து, இன்று, பண்டாரநாயக்காஞாபகார்த்தமண்டபத்திலே கூடியிருக்கும் அரசியல் தலைவர்களுக்கும், கூட்டுச்சேரா நாடுகளிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளுக்கும் எனது அன்பு வணக்கங்கள்.

'சிங்கள-பௌத்த-சிறீலங்கா'வை உருவாக்கி இந்நாட்டின் கூட்டுச்சேராக் கொள்கையை அறிமுகப்படுத்திய சிற்பி, அமரர் பண்டாரநாயக்காவிற்கு அஞ்சலி செலுத்துமுகமாக, உங்களுக்கு அன்னாரின் பூர்வீகத்தைப் பற்றிக் கூறி, ஐந்தாவது கூட்டுச்சேரா மாநாட்டின் தலைமையுரையை ஆரம்பிக்கின்றேன். அன்னாரின் முழுப்பெயர் சொலமன் வெஸ்ட் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா என்பதாகும். இப்பெயரிலிருந்தே, சிறீலங்காவிலே எப்படி ஏகாதிபத்தியவாதிகள் ஆதிக்கம் செலுத்தியுள்ளார்களென்று தெரியவில்லையா? ஆங்கிலக் காலனித்துவ ஆட்சியினருக்குக் குற்றேவல் பிரிந்த நிலப் பிரபுத்துவக் குடும்பத்திலேயே அமரர் பிறந்தார். அக்குடும்பமே, ஏகாதிபத்தியவாதிகள் இந்நாட்டிற்கு வந்து பரப்பிய கிறித்தவ சமயத்தைச் சார்ந்திருந்தது. அமரரின் தந்தையாரோ, தாம் ஆங்கிலேயருக்குச் செய்த ஏவல்களுக்குப் பிரதியுபகாரமாக, அவர்கள் வழங்கிய 'சேர்' பட்டத்தையும் தன் முன்னே சேர்த்துக் கூறிக் கொள்வதில் வெகு பிரியங் கொண்டிருந்தவர்.

இனி, என்னைப்பற்றிக் கூறுகின்றேன். நான், உயர்ந்த கண்டிய சிங்கள கொவிகம சாதியைச் சேர்ந்த பாண்ஸ்ரத்வத்த திசாவைக்கும், ரத்வத்த குமரிஹாமிக்கும் மகளாகப் பிறந்தேன். என்னுடைய தந்தையின் பெயரிலும் ஏகாதிபத்தியவாதத்தின் தாக்கம் இருப்பதை நீங்கள் நோக்கலாம். ஆனால் இது தவிர்க்கமுடியாததொன்று. அந்தக் காலத்திலே, ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழே சுகபோகங்களை அனுபவிக்க, நாங்களும் பெயர்களை ஆங்கிலப்பெயர்களாக வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எங்களின் குடும்பமும், காணி-பூமி - தோட்டம் - தேக்சம் ஆகியவற்றின் கடாட்சத்தில் அமரர் பண்டாரநாயக்காவின் குடும்பத்திற்குச் சற்றுங்குறைந்ததல்ல. எனவே மதத்தில் வேறுபாடு கொண்டிருந்த போதிலும், ஒரே நிலப்பிரபுத்துவ 'வளாவ' வர்க்கத்தையே இரு குடும்பத்தினரும் பிரதிநிதிப்படுத்தியதால், எனக்கும் பண்டாரநாயக்காவுக்கும் 1940ம் ஆண்டு திருமணம் நடந்தது.

இனி, எங்கள் சிறீலங்கா நாட்டின் கடந்தகால அரசியல் நிலையையும், அதனில் ஏகாதிபத்தியவாதிகள் வகித்த பங்கையும் பற்றிச் சற்றே உங்களுக்கு விளக்குகின்றேன். எங்கள் நாடு, பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து 1948-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றாலும், அவர்களின் அடிவருடிகளான சேனநாயக்கா குடும்பத்தாராலேயே முதல் எட்டு ஆண்டுகளும் ஆளப்பட்டது. (இதுவும், நிலப் பிரபுத்துவ 'வளாவ' வர்க்கத்தைச் சார்ந்த குடும்பமே.) அவர்கள் தங்களுடைய பதவிக்காலத்திலே, உருப்படியாக ஒரு சாதனையையும் செய்யவில்லை. அவர்களுடைய வெளிநாட்டுக் கொள்கையும், அவர்களின் எசமானர்களாகிய பிரித்தானியருடையதைச் சார்ந்ததாகவே இருந்தது.

கடந்த நூற்றாண்டிலே, ஆங்கில ஏகாதிபத்தியத்தினர் எமது கண்டிய சிங்கள வகுப்பினரின் பரம்பரை வளவுகளையும் நிலபுலங்களையும் பறித்து, அவற்றைத் தேயிலைத் தோட்டங்களாக்கி, அங்கு கொழுந்து பறிக்கவும், பெரும்பான்மைச் சிங்கள இனத்தவர்க்குப் பகையாக இருக்கவும், தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவந்து குடியேற்றிய தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்ததுதான், சேனநாயக்கர் செய்து, நான் மெச்சக்கூடிய ஒரேயொரு காரியம். இதனை, அந்தக் காலகட்டத்தில் சேனநாயக்கருடன் ஒட்டியிருந்த எனது கணவர் பண்டாரநாயக்காவும் பெருமனதுடன் ஆதரித்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1956ம் ஆண்டிலேயே சிறீலங்காவானது, காலனித்துவ ஆட்சியினரின் எச்சசொச்ச விலங்குப்பிடிகளிலிருந்து விடுபட்டு, தனது கூட்டுச்சேராக் கொள்கையைப் பிரகடனப்படுத்தியது. இந்த அரிய செயலைச் செய்தவர், வேறுயாருமல்ல, எனது கணவரே. "எனக்குப் பதவியைத் தந்தால், இருபத்து நான்கு மணி நேரங்களிலே, நான் ஏகாதிபத்தியவாதிகளின் ஆங்கில மொழியைத் தூக்கியெறிந்துவிட்டு, [illegible] தேசிய மொழியான சிங்கள மொழிக்குமுடிசூட்டுவேன்". என அமரர் பண்டாரநாயக்கா முழக்கிய சங்கநாதத்திற்கு, சிங்கள பௌத்த பெரும்பான்மை மக்கள் பேராதரவு கொடுத்தனர். ஆனால், அவரின் ஆசைக்கனவுகள் பல நனவாகுமுன்னர், தான் வணங்கிய பௌத்தமத குருவினால் சுடப்பட்டு 1959ம் ஆண்டு உயிர் துறந்தது, இந்நாட்டிற்கும் கூட்டுச்சேரா இயக்கத்திற்கும் பேரிழப்பாகும். (அமரர் பண்டாரநாயக்காவைக் கொலை செய்வதிலே, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உளவறியும் ஸ்தாபனமான சி. ஐ. ஏ. நிறுவனம் பெரும் பங்கு வகித்திருக்கக் கூடும் எனச் சமீபத்திலே, திடுக்கிடும் தகவல் ஒன்று வெளியானது. இத்தகவல் உண்மையென நிரூபிக்கப் பட்டால், கூட்டுச்சேராநாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர்க்கொடி எழுப்பவேண்டும் என்பது எனது பேரவா!)

தொடர்ந்த ஓராண்டுக் காலத்தினுள், நான் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. அமரர் பண்டாரநாயக்கா கட்டியெழுப்பிய சிறீலங்கா நிதஹஸ் பக்ஷயவின் பதவியை ஏற்கும் பொறுப்பு, அன்னாரின் மறைவுக்குப் பின்னர், அவரின் அன்புக்குரியவரான சார்ள்ஸ் பேர்சிவல் டீ சில்வாவின் தலையில் விழுந்தது. ஆனால் ஒரு பிரச்சினை காத்திருந்தது. சிங்கள-பௌத்த-சிறீலங்கா நாட்டிற்கு, கீழ்நாட்டு சிங்கள 'கரவா'சாதியைச் சேர்ந்த டீ சில்வா எப்படிப் பிரதமராகலாம்? எனவே, கண்டிய சிங்கள கொவிகம சாதியைச் சேர்ந்த நானே, கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றேன். 1960ம் ஆண்டிலே பொதுத்தேர்தலில் போட்டியிடாமலேயே, நான், பிரதமராகும் வாய்ப்பைப் பெற்றேன். குசினிக்குள் இருந்த என்னை 'குயீன்ஸ் ஹவுசில்' பிரதமராகச் சத்தியப்பிரமாணம் எடுக்கவைத்து, உலகின் முதலாவது பெண் பிரதமராக ஆக்கிச் சாதனை உருவாக்கியதற்காக, சிங்களப் பெரும்பான்மை இனத்தவருக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். 4½ ஆண்டுகள் பதவிவகித்த பின், முற்கூறிய பிரகிருதியான டீ சில்வா எனது 'முதுகில் குத்தியதால்' பதவியை இழந்தேன். (இச் சதிச் செயலுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உதவி புரிந்திருப்பார்களோ? — கூட்டுச்சேரா நாடுகளால் கட்டாயம் ஆராயப்படவேண்டிய விடயமிது.)

1970ம் ஆண்டிலே, பொது மக்களுக்குப் பொய்யான நம்பிக்கைகளை அளித்து, மீண்டும் பிரதமர் பதவிக்கு வர என்னால் முடிந்தது. 1972ம் ஆண்டிலே, இச்சிங்கள நாட்டிலே சிறுபான்மையினராக வாழும் வந்தேறு குடிகளான தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்புக்கு எதிரே, (ஆனால், அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய சில தமிழ் 'சீலே தொங்கி'களின் 'துணை'யுடன்) புதிய அரசியலமைப்புச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தேன். இதன் பிரகாரம், சிலோன் எனும் காலனித்துவ நாடு, சிங்கள-பௌத்த-சிறீலங்கா சோசலிசக் குடியரசாக மாறுவதற்கு வழிகோலியவர் நானே.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, பௌத்த மதத்திற்கே முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. மாநாட்டிற்கு வருகை தந்திருக்கும் இந்திரா காந்தி' மன்னர் பிரேந்திராபோன்ற இந்து சமயத் தலைவர்களே, அன்வர் சதாத், கேர்ணல் கடாபி, டாதுக் உன் ஹுசெய்ன் போன்ற முஸ்லிம் தலைவர்களே, அதிமேற்றிராணியார் மக்காரியோஸ் போன்ற கிறித்தவ சமயத்தலைவர்களே, கேளுங்கள்! — எங்கள் சிறீலங்கா நாட்டிலே, பொதுமக்கள் எல்லோரும் கொடுக்கும் வரிப்பணத்தைக்கொண்டு, பௌத்த சமயமே வளர்க்கப்படுகிறது. பௌத்த விகாரைகள், புத்தர் சிலைகள் முதலியன எழுப்ப, இந்த வரிப்பணம் பாரியமுறையில் உதவுகின்றது. இந்த மாநாட்டு மண்டபத்திற்கு முன்னால் கம்பீரமாக எழும்பியிருக்கும் அவுக்கண புத்தரின் சிலையானது, சுமார் மூன்றே மூன்று கிழமைகளுக்கு முன்னர் எழுப்ப ஆரம்பிக்கப்பட்டு, தங்கள் வருகையின் முன்னர் முடித்து வைக்கப்பட்டது என்பதைத் தங்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன். இதனிலிருந்து, சிறீலங்காவிலே பௌத்த மதத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தைத் தாங்களே அறிந்து கொள்ளலாம். மற்றைய மதங்களான இந்து, இஸ்லாம், கிறீத்தவம் ஆகியவற்றிற்கெல்லாம்' இரண்டாந்தர இடமே. இவற்றை எமது அரசாங்கம் ஆதரிப்பதுமில்லை.

இனி, எமது சிங்கள ஏகாதிபத்திய விஸ்தரிப்பு நடவடிக்கைகளைப் பற்றிச் சற்றே கேளுங்கள். 1972ம் ஆண்டிலே புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர், சிறீலங்கா நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மொழி பேசுவோரின் நிலை அல்லோல கல்லோலமாகியுள்ளது. நாங்கள், எமது இராணுவத்தினரை அப்பகுதிகளுக்கு அனுப்பி, தகுந்த முறையிலே நிர்வாகத்தை நடாத்தி வருகின்றோம். அப்பகுதிகளின் அரசாங்க அதிபர்களாகவும், பொலிஸ் மா அதிபர்களாகவும் சிங்களவர்களே நியமிக்கப்பட்டு, அவர்களின் கண்காணிப்பில் அலுவல்கள் நடைபெறுகின்றன. ஆர்ப்பாட்டம் செய்யும் அரசாங்க விரோதிகளை அடித்து நொறுக்குகின்றோம்; கொல்லவும் பின்வாங்குவதில்லை.



1974-ம் ஆண்டிலே, பத்துத் தமிழர்களைக் காவல் படையினர் கொன்று குவித்தது, எனக்கு நியாயமாகவே பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோர்ட் வால்ட்டைம் அவர்களே, இந்நாட்டிலே எமது அரசானது, ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமை சாசனங்களைக்கூட மதிப்பதில்லை; இவற்றை மீறுவதற்கும் பின்வாங்குவதில்லை. உதாரணத்திற்கு.

1) காங்கேசன் துறைத் தொகுதி மக்களின் வாக்களிப்பு உரிமையை இரண்டரை ஆண்டு காலமாக நாம் தடுத்து வைத்திருந்தோம்.

2) தமிழ்மொழி பேசும் மாணவர்களுக்கு இன, மொழி ரீதியிலே பாரபட்சம் காட்டி, 'தரப்படுத்தல்' எனும் 'முற்போக்குத்' திட்டத்தின் மூலம் அவர்களின் மேற்படிப்புக்கு உலை வைக்கின்றோம்.

--7-ம் பக்கம் பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணனை வாழ்த்துவோம்!

**அன்பு நண்பா,**

ஆகஸ்ட் 26 என்றதும் நம் அகமும் முகமும் மலர்கிறது; இதயம் ஆனந்தப்பள்ளுப் பாடுகிறது; நம்மையறியாமலே தமது வாயிலிருந்து 'வாழ்க நம் தலைவன் — வாழ்க பல்லாண்டு' என்று வாழ்த்தொலி பிறக்கின்றது; தமிழ் சமுதாயத்தை விடுதலைபெறச் செய்யும் சீரிய போராட்டத்தின் தனநாயகனுக விளங்கும் நம் தலைவனுக்கு வலிவும் பொலிவும், நீடித்த ஆயுளும் நல்கும்படி இறைவனை நோக்கி இருகரம் கூப்பித் தொழுதிடுகின்றோம்!

ஆம், ஆகஸ்ட் 26—நம் தமிழ் ஈழத்தின் நாயகன் பிறந்தநாள்! வாராது வந்துதித்த நம் மாமணியாம் மூதறிஞர் செல்வாவின் அடிச்சுவடு தவருது அடிமைத்தளையறுக்கும் புனிதப் போராட்டத்தை முன்னின்று நடத்தும் அண்ணன் பிறந்தநாள்! சாதிச் சகதிகளும், மூடப்பழக்கங்களும், பேதங்களும் பிளவுகளும் மூடிக்கிடக்கும் தமிழ் சமுதாயத்தை புத்துலகச் சமுதாயமாக மாற்றியமைக்கத் தோன்றிய புரட்சி மனிதன் பிறந்தநாள்! பொட்டுப்பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய், நத்திப்பிழைப்போராய், நடைப்பிணங்களாய், அடிமைப்பிறவிகளாய், ஆதரவு அற்றோராய், அரசியல் அநாதைகளாய் வாழும் ஈழத்தமிழர்களை எழுச்சிகொளச் செய்து, விடுதலைப் பரணி பாடிடச்செய்து, வீட்டுக்கொரு வீரனை நாட்டுக்காக அர்ப்பணிக்கின்ற நிலையைத் தோற்றுவித்திருக்கின்ற புத்துலகச் சிற்பியின் பிறந்தநாள்! ஆம், அண்ணன் அமிர்தலிங்கம் பிறந்தநாள் — நம் அடிமையிருள் துடைக்கும் சுதந்திரசூரியன் உதித்தநாள்!

இந்த ஆண்டு ஆகஸ்ட் 26ல் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களுக்கு அகவை நாற்பத்தொன்பது தொடங்குகிறது; கடந்த 48 ஆண்டுகாலத்தில் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளை அவர் தமிழ் சமுதாயத்திற்காக அர்ப்பணித்துவந்திருக்கிருர்! அண்ணனின் வாழ்க்கையுடன் தமிழ் சமுதாயத்தின் அரசியல் வாழ்வும் பிரிக்கமுடியாதபடி பின்னிப் பிணைந்து வந்திருக்கிறது!

தந்தை செல்வாவின் நிழலில் அரசியல் படித்து, கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம், இரும்புமனிதர் நாகநாதன், இணையற்ற தலைவர் இராசவரோதயம், கிழக்கின் நல்முத்து இராசமாணிக்கம் போன்ற பெருந்தலைவர்களுடன் ஒட்டி உறவாடி அவர்களது உணர்வுகளையும், அணுகுமுறைகளையும் பயின்று —இன்றைக்குத் தானைததளபதியாகி — தமிழினத் தலைவனுகி — இளைஞர்களின் இதய சிம்மாசனத்திலே கொலுவீற்றிருக்கும் பாசத் தலைவனுகி — தமிழர் விடுதலை இயக்கமாம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக விளங்குகிருர் அண்ணன் அமிர்தலிங்கம்!

**ஒளிபடைத்த கண்கள்!**
**உறுதிகொண்ட நெஞ்சு!**
**களி படைத்த மொழி!**
**கடுமைகொண்ட தோள்கள்!**
**தெளிவுபெற்ற மதி!**
**சிறுமைகண்டு பொங்கும் உள்ளம்!!**
**எளிமைகண்டு இரங்கும் நெஞ்சம்!!**
**ஏறுபோல் நடை!!**

கொண்ட நம்முடைய நாவலர் அண்ணன் அவர்கள் கடந்துவந்த பாதையிலே சந்தித்த சோதனைகள், நெருக்கடிகள், வேதனைகள், இழப்புகள், துன்பங்கள், துயரங்கள் ஏராளம் ஏராளம்! ஆனல் எதிர்ப்புக்களும் சோதனைகளும், துன்பங்களும், துயரங்களும் அவருடைய உறுதிக்கு முன்னல் தூள்தூளாகிப் போயினவே தவிர — அவரை அவை எதுவிதத்திலும் அசைக்கமுடிந்ததில்லை!

பொருமையும், எரிச்சலும், இயலாமையும், இருள் மனமும் கொண்டோர் அவரை வீழ்த்திட சதிகள் பல செய்ததுண்டு; ஆனல் நேர்மையொன்றையே அரசியல் அறமாகக்கொண்ட அண்ணனிடம் அவை பலித்ததில்லை! உண்மை, நேர்மை, சத்தியமே— அவருடைய ஊன்றுகோல்களாக என்றும் விளங்கி வருகின்றன!

இயக்கத்தின் உள்ளே இருப்பவர்களானலும் சரி—வெளியே இருப்பவர்களானலும் சரி — தவறு செய்பவர்களை அவர்கள் யாராக இருந்தாலும் — அவர்களது முகத்துக்கு நேரேயே கண்டிக்கும் துணிவும் நெஞ்சுரமும், நேர்மைத் திறனும் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்களிடம் மட்டுமேயுண்டு! இயக்கத்தின் நன்மையையே அவர் பெரிதாகக் கருதுவாரே தவிர — தனிப்பட்டவர்களின் கோபதாபங்களைப்பற்றி அவர் பொருட்படுத்துவதேயில்லை! மற்றவர்களுக்கு கசப்பாக இருக்கும் என்பதற்காக — மற்றவர்களின் மனம் கோணக்கூடாது என்பதற்காக-சொல்ல வேண்டிய கருத்துக்களை சொல்லவேண்டிய நேரத்தில் — சொல்லவேண்டியவர்களுக்கு அவர் சொல்லாமல்விட்டதில்லை! இளைஞர்கள் தவறு விடும்போது அவர்களையும் நேரடியாகக் கண்டிக்கிருர்; ஏனைய தலைவர்கள் வழிதவறும் போது அவர்களையும் நேரடியாகக் கண்டிக்கிருர்! இந்த துணிச்சலான நேர்மையை அண்ணனிடம் மட்டுமே நாம் காணுகிறோம்! இது அவரிடமுள்ள தனிச்சிறப்பு என்றாலும் — இதனல் அவர் மீது பகை கக்குவோரும் உண்டு! ஆனல் இயக்கத்துக்காக— இனத்தின் விடிவுக்காக எதையும் தாங்கும் இதயம் கொண்டவராக அண்ணன் விளங்குகிருர்!

இயக்கத்தால் தனக்கு என்ன இலாபம் என்று கணக்குப்பாராது — தன்னல் இயக்கத்துக்கு என்ன இலாபம் என்று கணக்குப்பார்த்து—இயக்கத்துக்காக தன்னையும் தனதுகுடும்பத்தையும் அர்ப்பணித்து தியாக நெருப்பில் நீந்திக்கொண்டிருப்பவர்; தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றக் கதிரையை கைப்பற்றுவதையே நோக்கமாகக்கொண்ட சுயநலமிகள் நிறைந்த சமுதாயத்தில் — தேர்தலைப் பற்றியே அக்கறை கொள்ளாது இனத்துக்காக தம்மை அர்ப்பணித்து வருபவர் அண்ணன் அமிர்தலிங்கம்!

பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றம் சென்ருல் மட்டுமே அரசியலில் தலைமை தாங்கலாம் என்ற நிலையை மாற்றி — பாராளுமன்றம் செல்லாமலே வெளியேயிருந்தும் விடுதலை இயக்கத்துக்கு தலைமை தாங்கி அதை வழி நடத்திச்செல்ல முடியும் என்பதை கடந்த ஆறு ஆண்டுகளாக நிரூபித்து—தமிழ் சமுதாயத்தின் வரலாற்றில் புதிய சிந்தனையை தோற்றுவித்திருக்கிருர் நமது நாவலர் அவர்கள்!

அண்ணனின் திறமையை — தமிழர் விடுதலைப்போரட்டத்தில் அவர் இதுவரை நிகழ்த்திய வீரப்போராட்டங்களை-கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் அவரது சொல்லாற்றலை — செயல் திறனை இந்த நாடு அறியும்! அவரது சிந்தனைகளோடு நூற்றுக்கு நூறுவீதம் ஒத்துவராதோரும், அவரது அந்தரங்க சுத்தியையும், இயக்கத்துக்காக தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்கும் தியாக மனப்பான்மையையும் கிஞ்சிற்றும் சந்தேகித்ததில்லை!

தமிழ் இனத்தின் விடுதலைப்போராட்டம் பலருக்கு வெறும் அரசியலாகமட்டுமேயிருக்கிறது; அண்ணன் அமிர்தலிங்கத்துக்கும், அவரது தலைமையை ஏற்கும் தமிழ் இளைஞர்களுக்கும் இன விடுதலைப் போராட்டம் — சொந்த வாழ்க்கைப் போராட்டமாக இன்றைக்கு இருக்கிறது! சொந்த வாழ்க்கையிலிருந்து பிரித்து இயக்கத்தை தனியே வைக்காது—தனது வாழ்க்கையையே இயக்கத்துக்காக அர்ப்பணித்துவருகிருர் அண்ணன் அமிர்தலிங்கம்!



தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தில் சிறைசென்று மீண்ட இயக்க வீரரான இளைஞர் ஒருவருக்கு விடுதலை இயக்கத்தின் தளபதி தலைவர் அவர்கள் மகிழ்ச்சி பொங்க உதயசூரியன் சால்வை போர்த்தி வரவேற்கும் காட்சி இது!

நமது நாவலருக்கு—நம் இனத்தின் காவலருக்கு நாற்பத்தொன்பதாவது அகவை தொடங்கும் இவ்வேளையில் மனப்பூர்வமான நமது வாழ்த்துக்களை அவருக்கு தெரிவிக்கும் அதேவேளையில் மனம்திறந்து பச்சையாகச் சில கருத்துக்களையும் சொல்லுவோம்!

தமிழ்ஈழ விடுதலைக்காக சிந்தனை, சொல், செயல், வாழ்க்கை அனைத்தையும் அர்ப்பணித்து—தமிழ்ஈழ விடுதலையை உள்ளபடியே நேசித்து அதற்காக போராடும் இளைஞர் பெரும்படையின் தானைத்தளபதி நீங்கள் தாம்!

## அரசியல் மேடை

தூற்றுவார் தூற்றட்டும் — போற்றுவார் போற்றட்டும் தொடருவோம் நம்பணி என இயக்கத்தை இயக்கிவரும் இதயம் நீங்கள் தாம்!

தந்தைசெல்வாவையடுத்து தமிழ் சமுதாயத்தின் முழு நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பெற்றிருக்கும் ஒரே தலைவர் நீங்கள் தாம்!

தமிழ் ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று — இயக்கத்தொண்டர்களை அறிந்து— அவர்களோடு நெருங்கி அளவளாவி — அனைவரையும் இணைத்துவைத்திருப்பவர் நீங்கள் தாம்!

தந்தை செல்வாவை அடுத்து—யாழகமும், வன்னித்திருநாடும், மன்னரும் மட்டக்களப்பும், அம்பாறையும் திருகோணமலையும், மலையகமும் அனைத்துத் தமிழ் ஈழமும்— ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரே தலைவர்—தமிழினத்தின் தேசியத் தலைவர் — நீங்கள் தாம்!

இயக்கத்தை மேலும் தூய்மைப்படுத்தி— புல்லுருவிகள் இருந்தால் அவற்றைக் கண்டுபிடித்து களைந்து எறிந்து—புனிதப் படுத்தி — விடுதலைப்போராட்டத்தை மேலும் விரைவுபடுத்திடக்கூடிய சக்தியும் ஆற்றலும் உங்களுக்குத்தான் உண்டு!

அதை நீங்கள் செய்யவேண்டும்—உங்களால் மட்டுமே அதனைச்செய்யவும் முடியும் என்று உங்கள் மீது நம்பிக்கை வைத்து விடுதலைப் போராட்டத்தில் குதித்திருக்கும் இளைஞர்கள் எதிர்பார்க்கிருர்கள்!

இயக்கத்தின் நன்மை கருதி நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் சிலருக்கு கசப்பாக இருந்திடக் கூடும்! உங்களை சர்வாதிகாரியென்று ஏசவும் கூடும்! ஆனல் இயக்கத்துக்காக அதையெல்லாம் தாங்கும் உளப்பாங்கு உங்களுக்கு மட்டுமேயுண்டு!

**ஒரு விடுதலைப் போராட்டத்தின் போது தலைவன் சிலவேளைகளில் சர்வாதிகாரியாகவும் மாறத்தான் வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்!**

நண்பா, இதய வாழ்த்துக்களையும், இதயத்திலோடிய எண்ணங்களையும் இதோ அண்ணன் முன் கொட்டியுள்ளேன்! உனது சார்பிலும்தான்! தள்ளவேண்டியவற்றைத் தள்ளி அவர் கொள்ளவேண்டியதைக் கொள்ளட்டும்! அவருடைய ஆணைக்கு தமிழ் சமுதாயம் என்றும் கட்டுப்படும்!!

**உன் அன்பு தோழன்.**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# காவலர்களா? காடையர்களா?

இலங்கையில் இன்று நடைபெறுவது சிவில் ஆட்சியா அல்லது பொலிஸ் இராணுவ தர்பாரா என்கிற கேள்விக்கு திட்டவட்டமான தெளிவான விடை இப்போது கிடைத்துவிட்டது.

அவசரகாலச் சட்டம் எனும் சர்வாதிகாரச் சட்டத்தின் கீழ் சிவில் நிர்வாகம் ஸ்தம்பித்துப்போன நிலையில்—நாட்டில் இன்று பொலிஸ், இராணுவ வெறியாட்டமே ஓங்கி நிற்பதைக் கண்டு ஜனநாயக உள்ளங்கள் அனைத்தும் வேதனைக் கண்ணீரைக் கொட்டுகின்றன.

அவசரகாலச் சட்டம் வழங்கியுள்ள மிதமிஞ்சிய அதிகாரத்தைப் பயன்படுத்தி — அதிகாரவெறியின் உச்சக்கட்டத்தில் பொலிசார் நடத்திவரும் வெறியாட்டங்களும், அந்த வெறியாட்டங்களின் விளைவாக சாதாரண பொதுமக்கள் உயிர் நஷ்டங்களுக்கும் ஏனைய தொல்லைகளுக்கும் உள்ளாக்கப்படுவதும் இந்நாட்டில் இன்று சர்வசாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது!

மக்களிடம் நம்பிக்கையிழந்து — செல்வாக்கை இழந்து தறிகெட்டு நிற்கும் இன்றைய ஆட்சியாளர் அவசரகாலச்சட்டத்தை துணைக்கொண்டு பொலிசையும் இராணுவத்தையுமே நம்பி — ஆட்சிக்கட்டிலில் இன்று அமர்ந்து கொண்டிருக்கின்றனர்!

தாம் இல்லாவிட்டால் —தமது ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இவர்களால் ஆட்சி நடத்திட முடியாது என்பதைப் புரிந்துகொண்ட ஆயுதப்படையினர் தங்கள் மனம்போனபடி துப்பாக்கித் தர்பார் நடத்தி வருகின்றனர்!

**பொலிஸ், இராணுவப் படையினரின் இந்த அதிகார மமதைக்கு ஆணவத்திமிருக்கு இந்நாட்டில் ஆளப்படும் இனமாக இருக்கின்ற தமிழ்த் தேசிய இனம்தான் மிக அதிகமாகப் பலியாகிவருகிறது!**

1974ம் ஆண்டு பொலிசாரின் காரணமற்ற வெறித்தனமான காட்டுமிராண்டித்தாக்குதலினுல்தான் உலகத் தமிழ் மாநாட்டில் பத்துத் தமிழர்கள் பதைபதைக்க மாண்டனர்!

பருத்தித்துறையில் நடைபெற்ற களியாட்ட விழாவின்போது இடம்பெற்ற பொலிசாரின் காடைத்தனமும்—பருத்தித்துறைக்கு அமைச்சர்கள் இருவர்சென்ற நேரத்தில், அங்கு கலைவிழாக் காணச்சென்றிருந்த அப்பாவித் தமிழர்களும் தமிழ்ப்பெண்களும் வெறிகொண்டு தாக்கப்பட்ட பொலிசாரின் காலித்தனமும்— அண்மைக் காலத்தில் நடந்த அட்டூழியங்களாகும்!

இவையாவற்றையும்விட உச்சக்கட்டமான — மிக மோசமான சம்பவம் சென்றவாரம் நடைபெற்றிருக்கிறது!

யாழ் பொலிஸ் அதிபரின் அலுவலகத்துக்கு, இரண்டு பொலிஸ் அதிகாரிகளின் சட்டவிரோத நடவடிக்கை பற்றி முறைப்பாடு செய்யச்சென்றிருந்த தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் அவர்கள், பொலிஸ் அதிபரின் அலுவலக வாசலிலேயே வைத்து பொலிஸ் வெறியன் ஒருவனுல் தாக்கப்பட்டதும், அவரது கார் அடித்து நொருக்கப்பட்டதும், கூட்டணித்தொண்டர்கள் சிலரது மண்டைகள் பிளக்கப்பட்டதும், இந்நாட்டில் சிவில் நிர்வாகம் அஸ்தமித்துவிட்டதென்பதையும் பொலிஸ் தர்பாரே நடைபெறுகிறது என்பதையும் துலக்கமாக எடுத்துக்காட்டிவிட்டது!

யாழ் மாவட்டத்தில் நடைபெறும் பொலிஸ் நடவடிக்கைகளுக்கெல்லாம் பொறுப்பானவர் பொலிஸ் அதிபரே; அவரது அலுவலக வாசலிலே—அதுவும் அவரிடம் புகார்செய்யச் சென்றவர்களுக்கு—அதிலும் பிரபல சட்டத்தரணிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்—இந்த நிலை ஏற்பட்டுவிட்டதென்றுல்—சாதாரண பொதுமக்களின் நிலைமை என்ன ஆவது?

**யாழ்ப்பாணத்துச் சம்பவத்தைப் பார்க்கும்போது—அது பொலிசாரால் நன்கு திட்டமிடப்பட்டு மேடையேற்றப்பட்ட காடைத்தனம் என்றே ஊகிக்கவேண்டியிருக்கிறது! சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டியவர்கள் சட்டத்தை அவமதிக்கும் காடையர்களாகிவிட்டால் யாரிடம் முறையிடமுடியும்? பொலிஸ் உடைக்குள் கடைந்தெடுத்த ஐ. ஆர். சி. க்கள் புகுந்து பொலிசார் போலப் பவனி வருகிறுர்களா? பொலிசாரின் காடைத்தனத்தைப் பார்க்குப்போது ஐ. ஆர். சி. க்கள் கூட பரவாயில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது!**

# அம்பாறை மாவட்டம் சிங்களவர் பிரதேசமா?

கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அடுத்துள்ளதாக அமைந்துள்ளது அம்பாறை மாவட்டம். இங்கு 1971 அக்டோபர் 9ம் திகதி எடுக்கப்பட்ட குடிசன மதிப்பு புள்ளி விபரங்களின்படி—

சிங்களவர்கள் 82286பேர்

தமிழர்கள் 57041பேர்

முஸ்லிம்கள் 100821பேர்

இதன்படி இங்கு வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் தமது தாய்மொழி தமிழாக இருப்பதால் தமிழைப் பேசும் இனமாக இருக்கிறுர்கள். மொத்தம் 157862பேர் தமிழைத் தாய்மொழியாக கொண்டவர்கள்.

இம்மாவட்டத்தில் மொத்தம் ஏழு காரியாதிகாரி பிரிவுகள் உள்ளன. இதில் இரண்டு பிரிவு தவிர ஏனைய ஐந்தும் தமிழ்த் தொகுதிகளான கல்முனை, நிந்தவூர், பொத்துவில் தொகுதிகளில் அமைந்துள்ளன. இத்தொகுதிகளின் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்களும் தமிழை தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களாக இருக்கின்றனர்.

ஆனுல், இங்குள்ள காரியாதிகாரி பிரிவுகளில் கடமையாற்றும் காரியாதிகாரிகள் (தற்பொழுது உதவி அரசாங்க அதிபர்கள் என அழைக்கப்படுபவர்கள்) சிங்களத்தினை தாய் மொழியாக கொண்டவர்களும், தனிச் சிங்களவர்களுமே யாகும். (இவர்கட்கு தமிழ் தெரியாது என்பது குறிப்பிடத்தக்கது) இதனுல் இப்பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தங்கள் காரியாதிகாரிகளுடன் நேரடியாக கலந்து தமது குறைகளை கூறி தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதவர்களாய் உள்ளனர்.

அடுத்து இவர்கள் தனிச் சிங்களவர்களா யிருப்பதனுல், சிங்கள பிரதேசங்களில் இருந்து வந்தவர்களா யிருப்பதன் காரணமாக இப்பகுதி மக்களின் தேவைகளை அறிந்து, இப்பகுதியின் அபிவிருத்தியில் பங்குபற்ற முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் இப்பகுதி தமிழ் பேசும் முஸ்லிம் தேசிய அரசப்பேரவையின் உறுப்பினர்கள் இதனை கண்டிக்க தவறுகின்றனர். பெரும்பான்மை கட்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதால் இவர்களால் இதனை சுட்டிக்காட்ட முடியவில்லை. எனவே இங்கு வாழும் தமிழர்களுக்காக தமிழர் விடுதலை முன்னணியை சேர்ந்த தேசிய அரசப்பேரவை உறுப்பினர்கள் குரல் கொடுக்கவேண்டும். இதனுல் இம் மாவட்டத்தை அதுவும் விரைவாக சிங்களப்பிரதேசமாக மாறிக்கொண்டிருக்கும் மாவட்டத்தை மீட்க முடியும் என நம்பலாம்.

—க. தனிநாயகம்

## தேசிய பேரவை...

—1-ம் பக்கத் தொடர்

பொலிஸ் காவல் போடப்பட்டிருந்தது.

எட்டுமணிவரை படிக்கட்டுக்களிலேயே உண்ணுவிரதமிருந்த கூட்டணி பா. உ.க்கள், பின்னர் சபாநாயகரின் ஆலோசனைப்படி, படிக் கட்டுக்களிலிருந்து உள்ளே சென்று மண்டபத்தில் உண்ணுவிரதத்தை தொடர்ந்து மேற்கொண்டிருந்தனர்.

வி. தர்மலிங்கம், சி சதிரவேற்பிள்ளை, எக்ஸ். எம். செல்லத்தம்பு, க. ஜெயக்கொடி, க. துரைரத்தினம் பா. நேமிநாதன், செ. இராசதுரை, அ. தங்கத்துரை வி. ஆனந்தசங்கரி பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகிய பத்துப் பா. உ.க்களும் தமக்குள் தேவார திருவாசகங்களையும், தமிழர் கீதங்களையும் பாடியபடி உண்ணுவிரதத்திலீடுபட்டிருந்தனர்.

சாவகச்சேரி பா. உ. வி. என். நவரத்தினம் இந்தியாவிலிருந்து இன்னும் திரும்பாததால், அவர் இதில் பங்குபற்றவில்லை.

சபையை ஒத்திவைத்து இளைஞர் பிரச்சினையை விவாதிக்கக்கோரும் தீர்மானத்துக்கு சபாநாயகர் அங்கீகாரம் அளிக்க மறுத்ததால், சாதாரண ஒத்திவைப்பு நேரத்தில் உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம் சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் உண்ணுவிரதம் பற்றியும் அவர்களை விடுதலை செய்வது பற்றியும் கேள்வியெழுப்புவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறுர்.

## தனிநபர் சட்ட...

—1-ம் பக்கத் தொடர்

ளப் பகுதியிலுள்ள கிராம சபை, பட்டினசபை தலைவர்கள் போன்றோருக்கு இச் சட்டமறுப்பு கடிதங்கள் அனுப்பிவைக்கப்படும்.

அனுப்பப்படவேண்டிய சட்டமறுப்புக் கடிதங்களை தமிழர் விடுதலைக் கூட்டணியின் போராட்டக் குழுவே தயாரிக்கும்; இதில் ஈடுபடும் தொண்டர்களையும் அக் குழுவே பொறுக்கியெடுக்கும்.

## இந்து இளைஞர் பேரவை 7வது மாநாடு

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 7வது மாநாடும் ஆண்டுக்கூட்டமும் இம் மாதம் 28, 29ம் திகதிகளில் கைதடி சைவ அனுதையில்லத்தில் நடைபெறுகிறது. பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள், நா. முத்தையா ஆகியோர் 28-8-76 காலை நிகழ்ச்சியின்போது சிறப்புரை வழங்குகின்றனர்.

# "சிறையில் காசி ஆனந்தன் உயிர்பிரிந்தால் நாடு பிரியும்"

—ஜெயக்கொடி

"சிறையில் உண்ணுவிரதமிருக்கும் கவிஞர் காசிஆனந்தன், சேனுதிராசா போன்ற இளைஞர்களின் உயிர் போகுமானுல் நிச்சயமாக அதிலிருந்து நாடுபிரியும். இந்தியாவில் ஆந்திர ராஜ்யம் அமைவதற்கு பொட்டிராமுலு உயிர்விட்டது எப்படி வித்திட்டதோ அதேபோல் இந்த இளைஞர்களின் உயிரிலிருந்து சுதந்திரத் தமிழ் ஈழம் எழும்பும்"

—இவ்வாறு 26-8-76ல் தேசிய அரசுப் பேரவையில் ஒத்திவைப்பு பிரேரணைமீது பேசிய உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி குறிப்பிட்டார்.

திரு. வி. தர்மலிங்கம் தமது பேச்சில் கூறியதாவது:-

"வடக்கிலே பஸ்கள் எரிக்கப்படுவதாகவும், வங்கிகள் கொள்ளையடிக்கப் படுவதாகவும்அதன் காரணமாக பாதுகாப்பு கருதியே தமிழ் இளைஞர்களை சிறையில் வைத்திருப்பதாகவும் பிரதமர் இங்கு கூறினுர். முன்னரும் இதே மாதிரிக் கூறியிருக்கிறுர். காசி ஆனந்தனும் சேனுதிராசாவும் ஏனைய இளைஞர்களும் சிறைக்குள் இருக்கும்போதுதான் இத்தகைய சம்பவங்கள் வெளியே நடைபெறுகின்றன. சிறையில் இருக்கும் இந்த இளைஞர்கள்—சிறையிலிருந்து கொண்டு வெளியிலும் வன்முறையில் எப்படி ஈடுபடமுடியும்? அவர்களிடம் மனித சக்திக்கு மேற்பட்ட மந்திர சக்தியிருந்தாலன்றி அவர் எவ்வாறு வெளியில் வன்முறையில் ஈடுபடமுடியும்?"

என்று கேட்டார். (முழுப் பேச்சு பின்னர் வெளிவரும்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவம் மிகவும் பாரதூரமானது; தமிழ் சமுதாயத்தை மிக ஆழமாகப் புண்படுத்திவிட்ட சம்பவம் இது! இதுபற்றி பிரதமர் பூரண விசாரணை நடத்த உடனடியாக உத்தரவுவிடுவது அவசியம்!

பொலிசாரின், இராணுவத்தினரின் இப்படிப்பட்ட அதிகார வெறியாட்டங்களுக்கு அரசாங்கம் முற்றுப் புள்ளிவைக்கத்தவறினுல்—எந்த ஆயுதப்படை இன்று [illegible] துணிந்ததோ [illegible] இன்றைய ஆட்சியாளரின் தலை மீதும் கைவைக்கத் தயங்காது என்பதை அரசு கட்டிலில் உள்ளோர்க்கு காலம் உணர்த்தத் தவறுது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வீடுகள் சுவீகரிப்பு! சிங்களவர் வீட்டுக்கு விதிவிலக்கு!

குடியிருப்பதற்கு வேறு வீடுகளற்ற 70 தமிழ் குடும்பங்களின் வீடுகள் காணி சுவீகரிப்புத்திட்டத்தின் கீழ் கலஹா நகரத்தில் சுவீகாரிக்கப்படவுள்ளன. இதே சமயம், சுவீகரிக்கப்படவிருக்கும் தமிழர்களின் வீடுகள் அமைந்துள்ள அதே பகுதியில் இருக்கும் ஒரு சிங்களவரின் வீடுமட்டும் இந்த சுவீகரிப்பிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளதாம்.

இதுபற்றி தெரியவருவதாவது:—

கண்டி மாவட்டத்திலுள்ள ஹேவாஹெட்ட தேர்தற் தொகுதியைச் சேர்ந்தது கலஹா நகர். இங்கு 70 குடியிருப்பு வீடுகள் ஒரு தமிழருக்கு சொந்தமாக இருக்கின்றன. இந்த 70 வீடுகளிலும் குடியிருப்பதற்கு வேறு வீடுகளற்ற சுமார் 700 தமிழர்கள் வாடகை செலுத்தி வாழ்ந்துவருகிறார்கள். இவர்களில் 570 பேர் இலங்கை குடியுரிமை பெற்ற பதிவுப் பிரஜைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 70 வீடுகளிலும் குடியிருக்கும் தமிழ்க் குடும்பங்களை 31-8-76க்கு இடையில் அங்கிருந்து எழும்புமாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின்கீழ் அப்பகுதி அரசாங்க அதிபர் உத்தரவு போட்டுள்ளார். இந்தக் குடும்பங்களை சேர்ந்தவர்கள். அரசாங்க அதிபரிடம் சென்று குறித்த வீடுகளை சுவீகரித்த பின்னரும் தங்களை அங்கேயே குடியிருக்க அனுமதிக்கும்படியும், அதற்குரிய வாடகையை அரசாங்கத்துக்கு செலுத்துவதாகவும், தம்மை அங்கிருந்து விரட்டினால் தெருவில்தான் நிற்க நேருமென்றும் அழமாட்டாக் குறையாகக் கெஞ்சியும், அரசாங்க அதிபர் தம்மால் எதுவும் செய்யமுடியாதென்று கையை விரித்துவிட்டாராம். 31-8-76க்குள் வீடுகளைவிட்டு எழும்பாவிட்டால், பலவந்தமாக அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கண்டிப்பகுதியில்— மலையகத்தில் இலங்கைக் குடியுரிமைபெற்ற தமிழர்களும் இனிமேல் வாழமுடியாத நிலையை உருவாக்கி, அவர்களை அங்கிருந்து விரட்டி கண்டியை கண்டிப் பிரதேச மக்களுக்கு சொந்தமாக்கும் "மண்ணின் மைந்தர்" கொள்கையை பின்பற்றும் அரசாங்கம், தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் "மண்ணின் மைந்தர்" கொள்கையை பின்பற்றுமல் அங்கு சிங்களவர்களைத் திட்டமிட்டுக் குடியேற்றிவருவது ஏன்? என்ற கேள்வி எழுகிறது!

மலையகத்தமிழ் மக்களுக்கு மலையகத்தில் இனி வாழ்வில்லை — வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேறினால் மட்டும் அவர்கள் இங்கு வாழமுடியும் என்ற நிலை இப்போது உறுதியாகி வருகிறது.

## குமிழ முனையில் கருத்தரங்கு

வவுனியாத் தொகுதியைச் சேர்ந்த குமிழமுனையில் கருத்தரங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி கிளை அங்குரார்ப்பணமும் அண்மையில் நடைபெற்றன. இதில் வவுனியா பா. உ. சே. மா. செல்லத்தம்பு, திரு. அமிர்தலிங்கம், முத்துசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர்.

புதுக்குடியிருப்பில் நடைபெற்ற கருத்தரங்கிலும் திரு. செல்லத்தம்பு பா. உ., மு. ஆலாலசுந்தரம், சிவதாசன் ஆகியோருட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

## உண்ணாவிரதத்தில் மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்கமும் கலந்துகொள்ளும்!

28-8-76 சனிக்கிழமை கொழும்பில் வெள்ளவத்தை சம்மாங்கோடு மாணிக்க விநாயகர் கோவிலில் நடைபெறும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் உண்ணாவிரதத்தில் மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்கமும் கலந்துகொள்வதாக ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

## அமரர் நினைவாக திருப்பலி!

தமிழ் மக்களின் மறைந்த மாபெரும் தலைவர் அமரர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின் நினைவாக 23-8-76ல் சுன்னுகம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் கட்டளைக் குரவர் வண பிதா சூசைப்பிள்ளை அடிகளார் தலைமையில் சுன்னுகம் மக்கள் சார்பில் அமரர் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலிபூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## மகளிர் உண்ணாவிரதம்!

30-8-76 திங்கட்கிழமை மட்டக்களப்பு கோட்டைமுனை அரசடிப்பிள்ளையார் கோவில் வீதியிலும், பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலய வீதியிலும் தமிழ் மகளிர் பேரவையின் உண்ணாவிரதங்கள் இடம்பெறுகின்றன.

## மகளிர் பேரவை ஆதரவு!

28-8-76 சனிக்கிழமை நாடெங்கும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நடாத்தும் ஒருநாள் உண்ணாவிரதத்துக்கு பூரண ஒத்துழைப்பு கொடுப்பதென தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக்கிளை தீர்மானித்துள்ளது.

## தொழிற் சங்ககூட்டணி செயலாளர் நாயகம் வேண்டுகோள்!

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் தமிழ் இளைஞர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் எதிர்வரும் 28ம் திகதி நாட்டின் பல பாகங்களில் ஏற்பாடு செய்துவரும் உண்ணாவிரதத்தில் தமிழ் தொழிற்சங்கக்கூட்டணியை இணைந்துள்ள சகலமொழி வழித் தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு தொழிற்சங்கக்கூட்டணியின் செயலாளர் நாயகம் ஐ. தி. சமபந்தன் கேட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்.

—1-ம் பக்கத் தொடர்

அனுப்பி வைத்த ஆயுதப் படைகள் முயலக்கூடும். எனவே ஆயுதப்படையின் சதித்திட்டங்களுக்கு நமது இளைஞர்கள் பலியாகிவிடாது இந்நேரத்தில் கட்டுப்பாட்டுடன் அமைதியாக இருக்கவேண்டும். இளைஞர்களும் பொதுமக்களும் இரவில் அனுவசியமாகவீதிகளில் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும்; அரசாங்கம் எதை எதிர்பார்க்கிறதோ அந்தச் சூழ் நிலையை நாம் ஏற்படுத்திக்கொடுக்காமல் இச்சமயத்தில் அமைதியுடனிருக்கவேண்டும்!"


இவ்வாறு அவர் கூறினார். இது இப்படியிருக்க, யாழ்ப்பாணத்தில் பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகளுக்குகூட பூரண தடைவிதிக்கப்படலாமென்றும் குறிப்பிட்ட தொகையினருக்கு மேலாக பொதுமக்கள் ஒர் இடத்தில் கூடுவதும் சட்டவிரோத [illegible] ஒரு செய்தி கூறுகிறது!


## "யோகக்கலை"

15 மில்க்வைற் நீல சோப், அல்லது 2 பார்சோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 சலவைப் பவுடர் அல்லது 2 மெடிக்கேட்டற் சோப் மேலுறைகளை அனுப்பி "யோகக்கலை" என்ற யோகாசன பயிற்சிப் புத்தகத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,**
**த. பெ. எண் 77 யாழ்ப்பாணம்.**


# வரோதய வள்ளல் நினைவுக் கூட்டம்



தமிழரசுக்கட்சியின் தொடக்ககாலத் தலைவர்களில் ஒருவரும், தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தன்னையே அர்ப்பணித்தவருமான திருமலை ஜோதி அமரர் இராசவரோதயம் அவர்களின் நினைவுநாள் ஆகஸ்ட் 27 ஆகும். அதையொட்டி திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோவில் வீதியில் எதிர்வரும் 28-8-76 ஞாயிற்றுக்கிழமை மாலை நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெறுகிறது. இக் கூட்டத்திற்கு திருகோணமலை பா. உ. பி. நேமிநாதன் தலைமை வகிக்கிறார். அடலேறு ஆலாலசுந்தரம், அளவெட்டி மு. திருநாவுக்கரசு, க. துரைரத்தினம் பா. உ., அ. தங்கத்துரை பா. உ. சட்டத்தரணிகள் இரா. சம்பந்தன், மு. கோ. செல்வராசா, திரு. வி. பூபாலபிள்ளை, திருமதி பிலோமினு லோறன்ஸ், வண ஜோசெப் மேரி அடிகளார், கார்த்திகேசு (இளைஞர் பேரவை) வீரசுப்பிரமணியம், ஈழத்துநாதன் மற்றும் பலர் பேசுவார்கள்.


## திருமண அழைப்பு

**சிற்றம்பலம் — நாகநாதன்**

6-9-1976 பி. ப. 5-15 மணிக்கு திருமதி திரு. பி. ஆர். சிற்றம்பலம் தம்பதிகளின் புதல்வி திரு நிறை செல்வி 'சூரியகுமாரி''க்கும் காலஞ்சென்ற டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் திருமதி நாகநாதன் ஆகியோரின் புதல்வன் திரு நிறை செல்வன் "இலங்கை" அவர்கட்கும் பம்பலப்பிட்டி புனித மரியாள் தேவாலயத்தில் திருமணம் நடைபெறும்.

தனிப்பட்ட அழைப்பு மடல்கள் அனுப்பப்படவில்லையாகையால் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வழைப்பினை ஏற்று திருமண நிகழ்ச்சியில் கலந்து மணமக்களை வாழ்த்தி ஏகுமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்.

22. டீல் பிளேஸ்
கொழும்பு-3

**எஸ். சிற்றம்பலம்**
**திருமதி இ. எம். வி. நாகநாதன்**

## திருமண அழைப்பு

**நாகநாதன் — சிற்றம்பலம்**

6-9-1976 பி. ப. 5.15 மணிக்கு திருமதி நாகநாதன் அவர்களின் புதல்வன் திருநிறை செல்வன் "இலங்கை"க்கும் திரு. பி. ஆர். சிற்றம்பலம் தம்பதிகளின் புதல்வி திரு நிறை செல்வி "சூரியகுமாரி"க்கும் பம்பலப்பிட்டி புனித மரியாள்தேவாலயத்தில் திருமணம் நடைபெறும்.

தனிப்பட்ட அழைப்பு மடல்கள் அனுப்பப்படவில்லையாதலால் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வழைப்பினை ஏற்று, திருமண நிகழ்ச்சியில் கலந்து மணமக்களை வாழ்த்தி ஏகுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

**திருமதி இ. எம். வி. நாகநாதன்**
**எஸ். சிற்றம்பலம்**

26, அல்பிறட் பிளேஸ்
கொழும்பு-3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவரின் மனச்சாட்சியையும் தட்டியெழுப்புகிறது உண்ணுவிரதம்!

## பிரின்ஸ், வாசுதேவ அறிக்கைகள் எடுத்துக்காடும் உண்மை இது!

**தமிழ் தேசிய இனத்தை அடிமைப்படுகுழியில் தள்ளிவீழ்த்திய புதிய அரசியல் சட்டத்தை எழுதிய லங்கா சமசமாஜக் கட்சியின் வாலிப முன்னணித் தலைவர் வாசுதேவநாணயக்காராவும், விமுக்தி பலவேகய என்ற சிங்களக் கட்சியின் பொதுச்செயலாளர் பிரின்ஸ்குணசேகராவும்-சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களின் நியாயமானகோரிக்கையை ஆதரித்தும், அரசின் சிங்கள இனவெறியைக் கண்டித்தும் அறிக்கைவிட்டிருப்பது — நமது இளைஞர்களின் ஆத்மீகப் போராட்டம் சிங்களவர்களின் மனச்சாட்சியையும் தட்டியெழுப்பிக் கொண்டிருப்பதையே எடுத்துக்காட்டுகிறது.**

"இன விடுதலைக்காக உரிமைப் போராட்டத்தில் இறங்கிய தமிழ் இளைஞர்களை சிறையில் அடைத்துள்ள அரசாங்கம் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினருக்கும் ஏனைய விடுதலை இயக்கங்களுக்கும் ஆதரவு அளித்துவருகிறது. சொந்த நாட்டில் விடுதலைப் போராட்டத்திலிறங்கியவர்களைசிறையிலடைத்துவிட்டு, வெளிநாட்டு விடுதலை இயக்கங்களை ஆதரிக்கும் இன்றைய அரசாங்கம், ஊருக்கு உபதேசம் உனக்கும் எனக்கும் இல்லையடி' என்ற கூற்றை நினைவுபடுத்துகிறது. தமிழ் இளைஞர்கள் நியாயமான கோரிக்கையொன்றை வைத்து சிறையில் உண்ணுவிரதமிருக்கிறார்கள், அவர்களது கோரிக்கை வெற்றி பெற அனைவரும் பக்கபலமாக இருக்கவேண்டும்,"

—இவ்வாறு விமுக்திபலவேகயாவின் பொதுச்செயலாளர் திரு. பிரின்ஸ் குணசேகரா பா. உ. விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். (வீரகேசரி19,876)

லங்கா சமசமாஜக்கட்சியின் வாலிப முன்னணி தலைவரும் கிரியெல்லை பா.உ,வுமான திரு. வாசுதேவ நாணயக்காரா தமது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"தென்னுபிரிக்கா, இஸ்ரேல் போன்றவற்றின் இனவாதக் கொள்கைகளை கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மாநாட்டில்கண்டித்துபேசிய பிரதமர் உள்நாட்டில் இனவாதக் கொள்கை வளர இடமளிப்பது தவறு; அப்படிச் செய்வது சர்வதேச ரீதியில் இழுக்கானது. தடுப்புக்காவலிலிருக்கும் தமிழ் இளைஞர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படவேண்டும்; இல்லையேல் விடுதலை செய்யப்படவேண்டும்; இரண்டும் செய்யாமல் அவர்கள் தொடர்ந்து தடுத்துவைக்கப்படுவது ஐ. நா. மனித உரிமை சாசனத்துக்கே முரணுனது.

"காரணமின்றி எவரையுமகைதுசெய்வதும் தடுத்து வைப்பதும் முறையற்றது; தமிழ்இனத்தவரை பொறுத்தவரையில் இப்படியான நடவடிக்கைகள் எடுப்பது அந்த இனத்தவர்களின் மனதைப் புண்படுத்துவதாக இருக்கும்."

(வீரகேசரி 21,8.76)

சம சமாஜக் கட்சியைச் சேர்ந்த ரூவான்வலை பா. உ திரு. அத்தாவுட செனவிரத்தின 25.8.76 வீரகேசரியில் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

"கடந்த 20 வருடங்களாக இந்நாட்டில் சிறுபான்மையினரின் பிரச்சினைகள் எதையும் தீர்க்கப்படவில்லை. பதவிக்கு வந்த அரசாங்கங்களும் அவற்றை நியாயமான முறையில் தீர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போதுசிறையில் சாகும்வரை உண்ணுவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களின் கோரிக்கை முற்றிலும் நியாயமானதே. அவர்கள் ஒன்றில் விடுதலை செய்யப்படவேண்டும் அல்லது விசாரணைக்குட்படுத்தப்படவேண்டும்."

(வீரகேசரி 25.8.76)

# தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி நாடெங்கும் நடைபெற்ற உண்ணுவிரதங்கள்!

* **அளம்பில்** அந்தோனியார் தேவாலய முன்றலில் சிறையில் உண்ணுவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு அனுதாபம் தெரிவித்து நடைபெற்ற ஒரு நாள் அடையாள உண்ணுவிரதத்தை மேற்படி கோவில் மூப்பனுர் மிக்கேல் பிள்ளை ஆரம்பித்துவைத்தார். பங்குக் குரவர் வண. இராசையா அடிகளார் உண்ணுவிரதத்தை முடித்து வைத்தார். தொடர்ந்து கருத்தரங்கும் நடைபெற்றது.

* **யாழ்-பாஷையூர்** புனித அந்தோனியார் கோவிலில் 20-8-76ல் நடைபெற்ற உண்ணுவிரதத்தில் ஏராளமான மக்கள் ஆண்களும், பெண்களும் கலந்துகொண்டனர். இதைத் தொடர்ந்து ஆசிரியர் அழகையா தலைமையில் கருத்தரங்கும் இடம்பெற்றது. வண. பிதா. சிங்கராயர் மேற்படி ஆலயத்தில் ஓர் விசேட பூசையை நடத்தினுர்.

* **அடம்பன்** தேவமாதா கோவிலில் சிறையிருக்கும் இளைஞர்களின் உண்ணுவிரதத்தை ஆதரித்து ஓர் அடையாள உண்ணுவிரதம் சென்ற கிழமை நடைபெற்றது.

* சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களின் நலனுக்காகவும், தமிழ் இனத்தின் விடுதலை வேண்டியும், 21-8-76 சனிக்கிழமை காலை யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள புனித சஞ்சுவாம் கோவிலில் விசேட திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டது. இத் திருப்பலி பூசையில் ஒப்புக் கொடுக்கப்பட்ட காணிக்கைகள் சிறையிருக்கும் இளைஞர்களின் குடும்ப நிதிக்கு வழங்கப்பட்டது. தொடர்ந்து கருத்தரங்கும் இடம்பெற்றது.

* **காரை நகரில** களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில் முன்றலில் 21-8-76 காலை 6 மணிமுதல் மாலை 6மணிவரை நடைபெற்ற உண்ணுவிரதத்தில் ஏராளமானேர் கலந்துகொண்டனர். திரு. அமிர்தலிங்கம் உண்ணுவிரதத்தை தொடக்கிவைத்தார். கருத்தரங்கும் நடைபெற்றது.

* **அளவெட்டி** தெற்கு முத்துமாரியம்மன் ஆலயத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற உண்ணுவிரதத்தில் முந்நூற்றுக்கு மேற்பட்டபெண்கள் கலந்து கொண்டனர். இந்த உண்ணுவிரதத்தை உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் முடித்துவைத்தார். இதையடுத்து ஸ்ரீமுருகன் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

* **புங்குடுதீவு** கந்தசாமி கோவில் முன்றலில் 20-8-76 நடைபெற்ற ஒரு நாள் உண்ணுவிரதத்தில் சுமார் 200பேர் கலந்துகொண்டனர். இதற்கு புங்குடுதீவு த. வி. கூ. கிளைத்தலைவர் திரு. வே. க. சோமசுந்தரம் தலைமை தாங்கினுர். உண்ணுவிரதமுடிவில் கருத்தரங்கு நடைபெற்றது.

* **தும்பளை** நெல்லண்டை அம்மன் கோவில் முன்றலில் நடைபெற்ற உண்ணுவிரதத்தில் சிறுவர் சிறுமியர் உட்பட நூற்றுக்கணக்கானேர் பங்குபற்றினர்.

* **பருத்தித்துறை** சிவன் கோவிலில் நடைபெற்ற ஒரு நாள் உண்ணுவிரதத்தின் முடிவில் சட்டத்தரணி வேலும் மயிலும் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. க. துரைரத்தினம் பா. உ. இதில் கலந்துகொண்டு பேசினுர்.

* சிறையில் உண்ணுவிரதமிருக்கும் இளைஞர்கள் உடல் நலத்துடனிருக்கவும் அவர்களின் நீதியான கோரிக்கை வெற்றியடையவும் பிரார்த்தித்து பருததித்துறை பிள்ளையார் கோவிலிலிருந்து பருத்தித்துறை சிவன் கோவிலுக்கு 15 இளைஞர்கள் கொதிக்கும் வெயிலில் அங்கப் பிரதிட்டைசெய்தனர்.

* **புலோலி** தெற்கு கொச்சிமா வீரபத்திரர் கோவில் முன்றலில் நடைபெற்ற உண்ணுவிரதத்தில் ஏராளமான சிறுவர் சிறுமியர்களும் கலந்துகொண்டனர். இந்த உண்ணுவிரதத்தை முடித்துவைத்து உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி உரையாற்றினுர்.

* **கோப்பாயில்** கோப்பாய் தெற்கு வீரபத்திரர்கோவில் முன்றலில் 22-8-76ல் நடைபெற்ற ஒரு நாள் உண்ணுவிரதத்தை கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை முடித்து வைத்தார். இவ்வுண்ணுவிரதத்தின்போது செல்வன் க. குகநேசன் சிறையிருக்கும் இளைஞர் குடும்பநிதிககு ரூபா 100-00 கையளித்தார். கருத்தரங்கில் திருவாளர்கள் தா. சிவசிதம்பரம் அ. தங்கத்துரை பா. உ, சாம் தம்பிமுத்து, செ. குணரத்தினம் ஆகியோர் பேசினர்.

* **ஆவரங்கால்** சிவன் கோவில் முன்றலில் புத்தூர் கி. ச. தலைவர் திரு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற உண்ணுவிரதத்தில் சிறுபான்மைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை உண்ணுவிரதத்தை முடித்துவைத்தார். இறுதியில் கருத்தரங்கும் இடம்பெற்றது.

* **வந்தாறுமூலையில்** தமிழ் இளைஞர் பேரவை தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியவற்றின் சார்பில் ஒருநாள் உண்ணுவிரதம் அனுட்டிக்கப்பட்டதுடன், சிறையிருக்கும் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி பிரதமருக்கு தந்தியும் அனுப்பப்பட்டது. உண்ணுவிரதத்தை கல்குடாத் தொகுதி த. வி. கூ. அமைப்பாளர் பத்மநாதன் ஆரம்பித்துவைக்க, மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவை தலைவர் கா. அன்ரன் முடித்து வைத்தார்.

* **கிரிமலையில்** 21-8-76ல் நடைபெற்ற உண்ணுவிரதத்தில் பெருந்திரளானேர் கலந்துகொண்டனர்.

* **கொம்மாதுறையில்** (கல்குடாத் தொகுதி) அனுட்டிக்கப்பட்ட ஒருநாள் உண்ணுவிரதத்தை கி. ச. உறுப்பினர் திரு. பொன்னுத்தம்பி ஆரம்பித்துவைத்தார். இந்த உண்ணுவிரதத்தை ஏற்பாடு செய்திருந்தவர் கல்குடாத் தொகுதி த. வி. கூ. மத்திய குழு அமைப்பாளர் ஆர். பதமநாதன் அவர்களாகும். உண்ணுவிரதத்தை ஏருவூர் த. வி. கூ. கிளைத்தலைவர் திரு. கணேசமூர்த்தி முடித்து வைத்தார்.

* **நவாலி** சிந்தாமணி பிள்ளையார் கோவிலில் 22-8.76ல் நடைபெற்ற உண்ணுவிரதத்தில் நவாலியைச்சேர்ந்த இந்துக்களும், கிறித்தவர்களுமாக ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். இந்த உண்ணுவிரதத்தை நவாலி கிறிஸ்தவ திருச்சபையைச் சேர்ந்த வண. மனேபவன் முடித்து வைத்தார். தொடர்ந்து கருத்தரங்கு நடைபெற்றது.

* **திருப்பழுகாமம்** ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய முன்றலில். திருப்பழுகாமம் தமிழ் இளைஞர் பேரவை கிளைத்தலைவர் திரு. இ. கந்தசாமி தலைமையில் அடையாள உண்ணுவிரதம் நடைபெற்றது. இந்த வைபவத்தை பட்டிருப்புத் தொகுதி த. வி. கூ. அமைப்புக் குழுத் தலைவர் திரு. நா. முத்துப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார். உண்ணுவிரத முடிவில் கருத்தரங்கும் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினம் விடுதலை பெறும்வரை மாலை மரியாதைகள் வேண்டாம்!



வாசு — யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நடந்துகொண்ட விதத்தைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்.

சேகர் — நண்டுக்கு கொழுப்பு வைச்சால் வளையில் தங்காது எண்டு சொல்லுவாங்க, அதுபோல கொழுப்பு வைச்சிட்டு. அதைக் கரைக்கவேண்டுமெண்டுட்டு ஆடுறானுகள்.

வாசு — போற போக்கப் பார்த்தால் பெரும் கலகங்கள்தான் மூளப்போகுது போல தெரியுது.

சேகர் — மூளட்டும்! கலகத்தில் பிறப்பதுதான் நீதி இவங்களிட அட்டகாசம் அதிகம் நாளைக்கு நிலைக்காது —பொடியங்களிலே கையை வைச்சு, பெட்டைகளிலே கையைவைச்சு — இப்ப தலைவர்மாரில கையைவைக்கத் துவங்கிற்ருனுகள் —கேவலம் இந்தக் காவல்காரன்கள் ஒரு தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரை எதிர்த்து வன்முறை பாவிக்கிறதென்ருல்? அதுக்கு அவனுகளைச் சொல்லிக் குற்றமில்லை தமிழன்கள அடிக்க, உயிர்வாங்க அதில சம்பந்தப்பட்டவங்களுக்கு பதவிஉயர்வு கொடுக்கிருன்களே அவங்களைச் சொல்லவேணும்.

வாசு — எனக்கு ஒண்டுமில்ல—எங்கட தளபதியிட தலையில அடிச்சானே ஒருவன்...! இனியும் இவங்க குட்டக் குட்டக் குனியலாமா?

சேகர் — அவங்க குனியிறது குட்டுக்குப் பணிந்தோ பயந்தோ அல்ல குட்டுறவன் காலை ஒரே அடியாக வாரிவிடுறதுக்கு என்றது போகப் போகப் புரியும். அமிர்தரிட தலையில் தட்டினனே ஒருவன், அவன் தலையில இதுவரை இடிவிழுந்திருக்கும் —ஆனல் தாக்கபபட்ட தளபதியாரே அகிம்சை அமைதி என்று அணைவரையும் அடக்கிவைத்திருக்கிற போது அதைமீறிச் செயல்பட எங்கட இளைஞர்கள் ஆயத்தமில்லை—

வாசு — நீ சொல்லுறது நியாயந்தான். ஆள் அசந்திருக்கிறநேரம் பார்த்து — நினையாப்பிரகாரமாய் வீரம் காட்டுறதுகள் தானே இதுகள்.

சேகர் — உங்களுக்குத் தெரியும்தானே யாழ்ப்பாணத்தில நடந்த வழக்கு ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு வரப் பயந்த பொலிஸ் அதிகாரீ ஒருவர் அதைக் கொழும்புக்கு மாத்தினது. ஏன்? தனது உயிருக்குப்பயந்து என்று அவரே சொல்லியிருக்கிருரே — இதையெல்லாம் வைச்சுப் பாக்கிற போது எங்க சிப்பாய்களிட வீரதீரப் பிரதாபங்கள் எல்லாம் கூட்டத்தோட வந்து குழப்பம் விளைவிக்கிறதோடசரி......

—அற்லஸ்

## கூட்டணி ஆதரவாளர்களுக்கு ஆனந்தசங்கரி வேண்டுகோள்!

**"இரண்டுவார சிறை அனுபவிப்பதாலோ-மாலை-மரியாதை-வரவேற்புகளை அளிப்பதாலோ—தமிழினத்துக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை— எம் இளைஞர்கள் சிங்களச் சிறைகளில் ஆண்டுக்கணக்காய்— அடி—உதைபட்டு—சித்திரவதைகளை அனுபவித்துக் கொண்டு — உண்ணாநோன்பு இருக்கின்றார்கள். ஆனல் நாம் இரண்டு வாரம் சிறைசென்று திரும்பியதற்காக—வரவேற்பு விழாநடைபெறுகின்றது. தமிழ்த்தாயின் அடிமைவிலங்கு ஒடிக்கப் படும்வரை —கோரிக்கைகள்—கொண்டாட்டங்கள்—கூட்டுறவு விழாக்கள் —வரவேற்பு விழாக்களை நாம் முற்ருகப் பகிஷ்கரிக்கவேண்டும்."**

இவ்வாறு கடந்த 12-8-76 திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தில் சட்டமறுப்புச் செய்தமைக்காக இரண்டுவாரச் சிறைத்தண்டனையை அனுபவித்துத் திரும்பிய கிளிநொச்சி பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரிக்கும் அவருடன் சிறைசென்ற தொண்டர்களான திருவாளர்கள். ஐ. திருஞானம், பா. வை. ஜெயபாலன், ஞா. ஞானராசா, ஆ. துரைராஜசிங்கம் க. புஸ்பகாந்தன் ஆகியோருக்கும் 22-8-76ம் திகதி கரைச்சி கிராம சபைத் தலைவர் திரு. கா. செல்லையா தலைமையில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் பேசிய கிளிநொச்சி பா. உ. பி. ஆனந்தசங்கரி கூறினர்.

கிளிநொச்சித் தொகுதியின் பல பாகங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கான தொண்டர்களும் — ஆதரவாளர்களும் இவ்விழாவில் கலந்து சிறைமீண்டோர்க்கு வரவேற்பு அழித்தனர். விசேசமாக யாழ்ப்பாணம்— வவுனியாவில் இருந்து ஆயுதம் தாங்கிய விசேட பொலிசார் வருகை தந்திருந்தனராயினும்—எம் இளைஞர்கள் கட்டுப்பாடான முறையில் நடந்துகொண்டதால் அங்கு எதுவித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை.

சிறைமீண்ட இளைஞர்கள் சார்பில் நன்றி தெரிவித்துப் பேசிய திருவாளர்கள் ஐ. திருஞானம், பா. வை. ஜெயபாலன் ஆகியோர் பேசும் போது அரசாங்கம் எமக்கு ஐம்பது ரூபா குற்றப்பணம் அறவிட இருந்தது. ஆனல் நாம் ஒவ்வொருவரும் அதைச் செலுத்த மறுத்து இரண்டுவார சிறையை அனுபவித்ததினல் எம் ஒவ்வொருவருக்கும் அரசாங்கம் நூற்றுக்கணக்கான ரூபாக்களை செலவுசெய்துள்ளது என்றும், எமது சமுதாயத்தை சுத்திகரித்தாலொழிய எமக்கு விமோசனம் கிடையாது என்றும் — சிறை அனுபவங்களையும், தமிழ் சிறை அதிகாரிகளின் அடிமை நிலையையும் எடுத்துரைத்தார்கள். இக்கூட்டத்தில் கிளிநொச்சி பா. உ. தொடர்ந்து பேசியதாவது:-

"தொண்டர்கள் மீது தலைவர்கட்கும் — தலைவர்கள் மீது தொண்டர்களுக்கும் பூரண நம்பிக்கை ஏற்படவேண்டும். இந்நிலை எம் மத்தியில் உருவாகவேண்டும்.

"தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலுக்காக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமல்ல —என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமாகியதோ அன்றே நாம் தேர்தலை மறந்துவிட்டோம். இரண்டு வார சிறையென்ன எமது சீவிய காலம்வரைசிறைவாசத்தைஅனுபவிக்கநாம்இன்று தயாராக உள்ளோம்.

கடந்த 21ம் திகதி யாழ்ப்பாணத்தில் எம்தலைவனை — தமிழினத்தின் காவலனை— இயக்கத்தின் முழுநேரத் தொண்டனை — தன்னையும் ஏன்—தன் குடும்பத்தையே இயக்கத்துக்காக அர்ப்பணித்து — தலைவன் என்ருல் இயக்கம்—இயக்கம் என்ருல் தலைவன் என்ற நிலையில் இருபத்தி நான்கு மணிநேரமும் இயக்கத்துக்காக உழைக்கும் உத்தமனை— காக்கிச்சட்டை அணிந்த சிங்களக் காடையர்கள் தாக்கினர்கள் என்ருல்—தமிழன் அடிமை என்பதற்கு வேறுசான்று வேண்டுமா? தமிழன் என்ருல்— அடி. அது சூரியராக இருந்தால் என்ன அவருடைய அடிவருடிகளாக இருந்தால் என்ன? இவர்களுக்கும் அவர்களால் அடி விழும்காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை இன்றைய சம்பவம் ஆணித்தரமாக நிரூபித்துவிட்டது. சிங்கள ஆட்சியில் தமிழன்அடிமைதான்.

"இங்கே நாம் விழாக்கள் எடுக்கின்ருேம். — எம் இளைஞர்கள் சிங்களச் சிறைகளில் —இனத்துக்காக தவம்இருக்கின்ருர்கள். ஆனல் இங்கு கொள்ளையடிக்கப்பட்ட பணத்திலே — கூட்டுறவு விழா—பெரிய தரகர்களுக்கு விருந்துபசாரம் — கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. எம் இனத்துக்கு விடுதலை கிடைக்கும்வரை — இவ்விழாக்களை மக்கள் முற்ருகப் பகிஷ்கரிக்கவேண்டும்."

சிறைச்சாலையில் தனக்கு நடந்த இராசமரியாதையைக் கூறிய அவர் எம் இளைஞர்கள் வருடக்கணக்கிலும் சிறையிருக்கத் தயார், ஆனல் அம்மாவின் சீர் உடையை அணியவே தயாரில்லை என்றவர். இதனுலேயே நான் இச்சீர் உடையுடன் கொழும்புக்குச் செல்லவும் தயங்கவில்லை. எனவே இந்நிலை மாறவேண்டும். ஒரு விடுதலை வீரன் எக்கஷ்டத்தையும் ஏற்க தயாராக இருக்கவேண்டும் என்ருர் அவர்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள்: சு. பொன்னையா, கா. நாகலிங்கம், க. ஏகாம்பரம், க. நாகேந்திரம், இ. கிருஷ்ணராசா உட்பட இன்னும் பலர் சொற்பொழிவாற்றினர்.

—வட்டக்கச்சியான்

## ஐந்தாவது கூட்டுச்சேரா மாநாட்டில் பிரதமர் சிறிமா...

—2-ம் பக்கத் தொடர்

3) நீதி விசாரணையின்றி இளைஞர்களைத் தடுப்புக் காவல் சிறையில் வைத்துச் சித்திரவதை செய்வதிலே, எங்களை விஞ்சியவர்கள் இவ்வுலகில் யாருமிருக்க முடியாது.

இப்படியாகப் பல.

இப்போது, தமிழ் மக்களிடையே பெரிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதை நானும் எனது அரசாங்கமும் அறியக்கூடியதாயுள்ளது. எமது 'இன ஒதுக்கல், அத்துமீறிய எல்லை விஸ்தரிப்பு நடவடிக்கைகளை அவர்கள் தீவிரமாக எதிர்த்துப் போராடத் துணிந்துவிட்டனர். தமிழர்களின் தலைவராக, கடந்த இருபதாண்டு காலமாக செல்வநாயகம் இருந்துவருகின்ருர். இவர், எனது கணவர் பண்டார நாயக்காவின் பள்ளித்தோழர். செல்வநாயகத்திற்கு இப்போ நன்கு வயதாகிவிட்டது; ஊதிவிட்டால் விழுந்துவிடுவார். ஆனல், அவருடைய உள்ளத்தின் திண்மைக்கு முன் என்னல் நிற்க முடியாமலிருந்தது. செல்வநாயகம் 'எள்ளை எடுத்து...' எனக்கூறி முடிக்கு முன்னர், தமிழ் இளைஞர்கள் 'இந்தாருங்கள் எண்ணெய்' எனத் துடித்து நிற்கின்றனர்.

செல்வநாயகத்துடன் இப்போது, (ஐம்பதுக்கு ஐம்பது' கேட்டு அந்தக்காலத்தில் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய) ஜீ. ஜீ. பொன்னம்பலமும் சேர்ந்துவிட்டார். பொன்னம்பலத்தை நினைக்கையில், எனக்குக் கதிகலங்குகின்றது. 1962ம் ஆண்டில், எனது அரசைக் கவிழ்க்க சதிமுயற்சி செய்த துரோகிகளைத் தனது வாதத்திறமையால் நிரபராதிகளாக்கியவர் அவர். அத்துடன், கடந்த மாதம் "1972ம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த அரசிலயலமைப்புச் சட்டமே செல்லுபடியாகாது" என்று பொன்னம்பலம் வைத்த வேட்டு, சிறீலங்கா முழுவதும் பெரிய புயலைக் கிளப்பியுள்ளது. சென். பிரிட்ஜட்ஸ் கொன்வென்ரில், எட்டாம் வகுப்பு... [illegible] எனக்கு, இந்த இராணி வழக்கில் பொன்னம்பலம் கூறுவது கிரேக்கமா—லத்தீனு — சமஸ்கிருதமா—பாளியா? (mutatis mutandis சிக்கல்தான்) ஒரே குழப்பமாக உள்ளது. ஒன்றுமே புரியவில்லை.

செல்வநாயகமும் பொன்னம்பலமும் சேர்ந்துவிட்டதால், தமிழ்மக்கள் இப்போ புதிய பலம்பெற்றுவிட்டனர். எனது சிங்கள ஏகாதிபத்திய ஆட்சி ஆட்டங்காணத்தொடங்கியுள்ளதை நான் உணரக்கூடியதாயுள்ளது. இதற்குத் திரிவைப்பதுபோல, அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்திய வல்லரசுகளிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் எனக்கு எதிராகப் பிரசாரம் செய்யத்தொடங்கியுள்ளன.

கடந்த டிசம்பர் மாதம், பிரபல அமெரிக்க வார சஞ்சிகையான 'டைம்,' நான் எனது குடும்பத்தினருக்கும் (வேறு யாருக்குமல்ல — எனது அருமைப் பிள்ளைகளுக்கும், தம்பிமாருக்கும்), நெருங்கிய உறவினருக்கும் வழங்கியுள்ள பதவிகளை, பட்டம்போட்டுக் காட்டி உலகிற்கு வெட்டவெளிச்சமாக்கியது. உலகின் முதற்பெண் பிரதமரான எனக்கு ஏற்பட்ட இந்த மூக்குடைவு மாறு முன்னரே, பிரிட்டனிடமிருந்து வெளிவரும் 'கார்டியன்', 'லண்டன் டைம்ஸ்', 'டெய்லி தெலிகிராப்' போன்ற ஏகாதிபத்திய ஊதுகுழல் பத்திரிகைகளும், சிறீலங்காத் தமிழர் பிரச்சினையைப் பெரிசுபடுத்தி செய்திகளாக வெளியிட்டும், தலையங்கம் தீட்டியும், என்னையும் சிங்கள பௌத்த ஆரசையும் பெரிதும் அவமதித்துள்ளன.

இச்செய்கைகள், மூன்ரும் உலகநாடுகளின் கூட்டுச்சேராக்கொள்கைக்கு விழுந்த பலத்த அடியாகும். இதற்குப் பதிலடி கொடுக்க, இங்கு குழுமியிருக்கும் நாடுகள் தகுந்த முறையில் ஆலோசித்துத் தீர்மானம் நிறைவேற்ற, எல்லாம்வல்ல புத்தபெருமான் பலத்தைக் கொடுப்பார் என்ற நம்பிக்கையில், என் தலைமைப் பேருரையை முடித்துக் கொள்கிறேன்.

—சிந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# சிறையில் வாழும் இளைஞர்களுக்காக சிலுவையின் நிழலில் உண்ணுநோன்பு

இம்மாதம் 22-8-76 அன்று அடம்பன் பங்குத் தந்தை அருட்திரு தேவ தாசன் அடிகளார் தலைமையில் அடம்பன் கிறீஸ்தவ இளைஞர் ஒன்றியமும், அடம்பன்வாழ் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து நடாத்திய உண்ணுநோன்பு, புனித வியாகுல அன்னையின் கோயில் வளாகத்தில் இடம் பெற்றது. இதில் 100 இளம் பெண்கள் உட்பட 300 பேர் கலந்துகொண்டனர். ஒரு நாள் முழுதும் சிலுவையின் நிழலில் அவர்கள் அமர்ந்து, வேண்டுதலிலும், இறைவாக்கைத் (பைபிள்) தியானிப்பதிலும், பஜனைகள் பக்திப் பாடல்கள் இசைப்பதிலும் செலவிட்டனர். சிறப்புரைகளும் சிந்தனைக்கு விருந்தாக வழங்கப்பட்டன. அங்கு நடப்பட்டிருந்த சிலுவையில், "உண்மையின்விலை"; "உரிமையின் வழி" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

அருட்திரு தேவதாசன் அடிகளார் தனதுரையில், உண்மைக்கு வாதிட்ட—உரிமைக்குரல் கொடுத்த-அநீதியைக் கண்டித்த கிறீஸ்துவின் அடிச்சுவட்டில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் நடக்கவேண்டும் என்றும், கிறீஸ்துவின் பாதையில் நடக்கும் ஒவ்வொருவனுக்கும் கிடைக்கப்போவது,சிலுவையும், இன்னலும், துன்பங்களும்தான் என்றும், அதைத் தாங்குவதற்கு கிறிஸ்துவின் சிலுவை திடம் அளிக்கும் என்றும் கூறினார். மேலும், தனதுரையில் உரிமைப் போராட்டத்தில் இத்தகைய சிலுவைகளை நாம் சந்தித்தேயாகவேண்டுமென்றும், எந்தத் தியாகங்களுக்கும் நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்றும் கூறிய அவர், மேலும், தமது இந்து சகோதரர்கள்,தமிழ்க் கிறிஸ்தவர்களும் தங்கள் உடன்பிறப்புக்கள், இனத்தால் — மொழியால் — பண்பாட்டால் — கலாச்சாரத்தால் அவர்களும் நம்மோடு இரண்டறக் கலந்தவர்கள் என்பதை உணர்ந்து ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். இதற்கு சமய வேறுபாடற்ற இக்கூட்டமே சான்று பகரும் என்றார்.

மாந்தை வடக்கு ஊராட்சி மன்றத்தலைவர் திரு. பி. எம். செபமாலை "தமிழீழத்தின் பொருளாதாரம்" என்ற தலைப்பில் உரைநிகழ்த்தினார். அவர் தனதுரையில் இளைஞர்கள் யாவரும் மலரப்போகும் தமிழீழத்தைக் கட்டி எழுப்ப இப்போதே தம்மை ஆயத்தப்படுத்த வேண்டுமென்றார். த. வி. கூட்டணிப் பிரமுகரான திரு. செளந்தரநாயகம் (பூராசா) நமது வி. கூட்டணியின் கொள்கைகள் பட்டிதொட்டிகள் தோறும் இளைஞரால் எடுத்துச்செல்லப்பட்டு, மக்களுக்கு விளக்கப்படவேண்டும் என்றார். மாலையில் சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களுக்காகப் பணம் சேர்க்கப்பட்டது, அதையடுத்து அவர்களின் நலனுக்காகத் திருப்பலிப் பூசையும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஈற்றில் தேனீருடன் உண்ணுநோன்பு முடிவுற்றது.

## கிழக்கில் உண்ணுவிரதங்கள்!

மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் கோவிலிலும், ஆரைப்பற்றை செல்வா நகர் சிவன்கோவில் வீதியிலும் கற்குடாத் தொகுதியில் கிரான் பிள்ளையார் ஆலய வீதியிலும், பட்டிருப்புத்தொகுதியில் களுவாஞ்சிக்குடி விநயகர் ஆலய வீதியிலும், கல்முனைத் தொகுதியில் கல்முனை அம்பலத்தடி பிள்ளையார் ஆலய வீதியிலும், சம்மாந்துறைத் தொகுதியில் வீரமுனை பிள்ளையார் ஆலய முன்றலிலும், பொத்துவில் தொகுதியில் காரைதீவு கண்ணகையம்மன் ஆலய வீதி ஆலையடிப்பிள்ளையார் கோவில் வீதி, அக்கரைப்பற்று மாணிக்கப்பிள்ளையார் ஆலய வீதியிலும் 29-8-76 காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காகவும் தமிழ் ஈழத்தை புனரமைப்பதற்கு மக்களைத் தயார்படுத்துமுகமாகவும் ஒருநாள் உண்ணுவிரதங்கள் நடைபெறுகின்றன.


**செல்லமகால்**
**இப்பொழுது காட்சியளிக்கிறது**
சிவாஜி மஞ்சுளா, நாகேஷ்
வி. கே. ராமசாமி, தங்கவேலு நடித்த
**அன்பே ஆருயிரே**
(ஈஸ்ட்மன் கலர்)
திரைக் கதை—டைரக்ஷன் ஏ. சி. திருலோகசந்தர் M. A.

**30ம் திகதி முதல்**
**கெபிட்டி**
ரவிச்சந்திரன், டி. எஸ். பாலையா,
சந்திரபாபு பாரதி நடித்த—
**வாலிப விருந்து**
29ம் திகதி மட்டும்
**உங்க வீட்டு கல்யாணம்**

**ரீகல்** (மட்டுநகர்)
29ம் திகதி மட்டும்
சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி நடித்த
**'அவள் ஒரு தொடர் கதை'**
30ம் திகதி முதல் **கிறேஸிபோய்ஸ்ஒப்தகேம்ஸ்**

**ரொக்ஸி** இப்பொழுது
ஏ. வி. எம். ராஜன், சசி குமார். ஸ்ரீகாந்த்
நிர்மலா, சந்திர பாபு நடித்த—
**அவள்**

**கெப்பிட்டல்** 4வது வாரம்
ஜெய்சங்கர், பி. பானுமதி, நிர்மலா,
சுந்தரராஜன் மற்றும பலர் நடித்த-
**எடுப்பார் கை பிள்ளை**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ்நகர்) 3வது வாரம்
சிவகுமார் ஜெயசித்ரா நடித்த
**தங்கத்திலே வைரம்**

3வது வாரம்
**பிளாசா**
சிவாஜி கே. ஆர். விஜயா
ஸ்ரீகாந்த், பிரமிளா, வி.கே ராமசாமி,
மேஜர் சுந்தரராஜன், மனோரமா, சோ
— நடித்த —
**தங்கப் பதக்கம்**
(ஈஸ்மன் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 29-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.